டாக்டர் அனுராதா ராஜீவன் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவராக இருக்கும்பொழுது பெற்றிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 182, டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்:

182–

அவிநாசி தொகுதி, அண்ணாநகர் மக்களுக்கு பட்டா வழங்குதல்

**23975--டாக்டர் மு. சீனியம்மாள்:*

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அவிநாசி தொகுதி, அண்ணா நகர் மக்களுக்குப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவிநாசி தொகுதியில் அண்ணா நகர் என்பது திருப்பூரும் அவிநாசியும் சந்திக்கின்ற இடம். இதில் நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் அரசுப் புறம்போக்கு இடத்தில் சுமார் 20 வருடங்களாக குடியிருந்து வருகின்றனர். இவர்கள் அனைவரும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் மேல் பற்றும், பாசமும், பக்தியும் கொண்டவர்களாக, காலம் காலமாய் இரட்டை இலைக்கு மட்டுமே ஓட்டுப் போட்டவர்கள். தேர்தலின்போது இவர்களுக்கு பட்டா வழங்க நம் அரசு உதவும் என உறுதி அளிக்கப்பட்டது. இதே லைனில் திருப்பூர்பந்தல் பாளையம் மக்களுக்கு பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. இருந்தும், அண்ணா நகர் மக்களுக்கு இதுவரை பட்டா வழங்கப்படவில்லை. கூடுதல் மாவட்ட ஆட்சியர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாலையில் அருகில் இருந்த குடிசைகளை அப்புறப்படுத்தி ரோட்டை அகலப்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். தூண்டா மணிவிளக்காய், ஏழைகளின் எளிய குடிசைகளில் ஏற்றி வைக்கப்பட்டுள்ள இலவச மின்விளக்கு நம் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய இதயத்தில் நிரந்தரமாக குடியேறி இருகின்ற அவிநாசித் தொகுதி மக்களுக்கு. அவர்களுடைய இதயமான அண்ணா நகர் பகுதி மக்களுக்கு பட்டா வழங்கிட மாண்புமிகு அமைச்சரவர்கள் அன்புடன் நம் தலைவி அவர்களுடைய உத்தரவைப் பெற்று, வழங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1994 ஏப்ரல் 5]

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டா வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வழங்கப்படும் என்று சொல்லிவிட்டார்கள். அடுத்த கேள்வி எதற்கு? அடுத்த கேள்வி கேட்டு கெடுத்துவிடக் கூடாது. வினா எண் 183, திரு. வே. தம்புசாமி மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

183–

கங்களாஞ்சேரி வழியாக பழயவலத்திற்கு நகரப் பேருந்து விடுதல்

**20008*--திரு. வே. தம்புசாமி:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருவாரூரிலிருந்து கங்களாஞ்சேரி வழியாக பழயவலத்திற்கு நகரப் பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவாரூரிலிருந்து கங்களாஞ்சேரி வழியாக பழயவலத்திற்கு நகரப் பேருந்து விடும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழயவலம் என்பது உட்கிராமம். அந்த கிராமம் திருவாரூர் நகருக்கு அருகாமையில் இருக்கிறது. அங்கேயிருந்து திருவாரூர் நகரத்திற்கு வரவேண்டுமென்று சொன்னால், 3 கிலோமீட்டர் தூரத்திற்குள் நகரை வந்து அடைந்துவிட முடியும். ஆனால் வட்டாற்றிலே போக்குவரத்திற்கு எந்த விதமான பால வசதியும் இல்லாத காரணத்தால், அந்த மக்கள் பழயவலத்திலிருந்து செறுகுடி, கருப்பூர், கங்களாஞ்சேரி வழியாக ஏறத்தாழ 13 கிலோமீட்டர் சுற்றி வந்து நகரத்தை அடைய வேண்டி இருக்கிறது. இதனால் பள்ளிக்கூடத்திற்கு வரவோ, மருத்துவ மனைக்கு வரவோ அல்லது இதர பொதுக் காரியங்களுக்கு வரவோ முடியாமல் மக்கள் அவதிப்படுகிறார்கள். ஆகவே திருவாரூரிலிருந்து நாகூருக்குச் செல்லக்கூடிய நகரப் பேருந்தை அந்தக் கிராமத்திற்கு காலையிலே ஒரு தடவையாவது, மாலையிலே ஒரு தடவையாவது இயக்கினால் அந்த மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு நகரத்திற்கு வர உதவியாக இருக்கும். அந்த வகையிலே அமைச்சரவர்கள் அந்தப் பேருந்தை விட ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.